අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112784846
isurupaya@moe.gov.lk www.moe.gov.lk


මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/05/67/28/06 (II தொகுதி) ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2022.06.

சகல தேசிய பாடசாலை அதிபர்கள்/

பீடாதிபதிகள்/ ஆசிரிய கலாசாலை அதிபர்கள்/

ஆசிரிய நிலைய முகாமையாளர்கள்

**முதன்மை தொழில்நுட்பம் அல்லாத பணியாளர் வகை (PL-I), முதன்மை அரை தொழில்நுட்ப பணியாளர் வகை(PL-2) மற்றும் முதன்மை தொழில்நுட்ப பணியாளர்கள் (PL3) வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுத்தல் 2022**

மேற்படி சேவை வகைகளுக்குரியவாறு முதலாவது/ இரண்டாவது மற்றும் மூன்றாவது வினைத்திறன தடைதாண்டல் பரீட்சைக்களுக்காக 2022.06.16 ஆம் திகதி முதல் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் பிரகாரம் உங்களுடைய நிறுவகத்தில் / பாடசாலையில் பணிபுரியும் மேற்படி சேவை வகைகளுக்குரிய பணியாளர்களை இது குறித்து அறிவுறுத்தும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

**02.** இந்த தடைதாண்டல் பரீட்சை பாடவிதானம் (இணைப்பு 1) ஆகவும், பரீட்சை விண்ணப்பத்தின் மாதிரியாகவும் (இணைப்பு 02) இத்துடன் முன்னிலைப்படுத்துகிறேன்

**03.** இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை தொடர்பாக பின்வரும் விடயங்கள் குறிக்கப்பட்ட பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம்.

i. முந்திய வருடங்களில் நடாத்தப்பட்ட வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றாத மற்றும் தோற்றினாலும் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்திபெறாதவர்களுக்கும்

ii. தரப்படுத்தப்பட்ட, பதவியுயர்வுப் பெற்ற பணியாளர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்ட தரத்திற்குரியவாறு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கும்

iii. புதிதாக நியமனம் பெற்றவர்களுக்கும்

iv. தற்போது தமக்குரிய தரத்திற்குரியவாறு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலும், பின்னர் பதவியில் மாற்றம் ஏற்பட்ட பணியாளர்களுக்கு (உ.ம். சேவை உதவியாளர்கள் - நூலக சேவை உதவியாளர்கள் - ஆய்வுகூட சேவை உதவியாளர்கள் - பாதுகாப்பு உத்தியோகத்தராக பதவி மாற்றப்பட்ட பணியாளர்களுக்கும்) ஒவ்வொரு தரத்திற்குரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையை மீண்டும் பூர்த்தி செய்வதற்கும்

v. உள்ளடக்கப்படும் சிக்கல்கள் அல்லது நியமனக் கடிதத்தில் சம்பள அளவை பதிவு செய்வதில் ஏற்படும் பிழைகள் காரணமாக தமக்குரிய தரத்தின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கு மேலான ஒரு தடைதாண்டல். ஏற்கனவே தேர்ச்சி பெற்ற ஊழியர்கள் இதுவரையில் குறிப்பிட்ட தரத்தின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை தேர்வை இன்னும் பூர்த்தி செய்யவில்லை என்றால் அந்த ஊழியர்களும் அந்த குறிப்பிட்ட தரத்திற்குரிய பரீட்சைக்கும்

vi. ஏற்பனவே தமக்குரிய தரத்தின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் அந்த சேவையில் அடுத்த தரப்படுத்தல் பதவியுயர்வுக்கான குறிப்பிட்ட சேவைக்காலத்தை பூர்த்தி செய்த, ஆனபோதிலும், இதுவரையில் தரப்படுத்தல் பதவியுயர்வுக்கான கடிதத்தை பெறாத ஊழியர்களுக்கும், அடுத்து வரும் தரத்திற்குரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்றுவதற்கும்

**04.** அதன் பிரகாரம் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையை விட அதிகபட்ச எண்ணிக்கைக்கு முகம்கொடுக்கும் நிலை ஏற்பட்டால் அனைத்து கோரிக்கைகளையும் ஒரு விண்ணப்பத்தின் மூலமாக் முன்வைக்கலாம்.

**05.** உரிய வலயக் கல்விப் பணிப்பாளர்/பீடாதிபதியினால் பரிந்துரைக்கப்படும் விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலமாக மாத்திரம் 2022.07.10 ஆம் திகதிக்கு முன்னதாக முன்னிலைப்படுத்துவது அத்தியாவசியம் என்பதுடன், கடித உறை பின்வரும் மாதிரிக்கமைவாக இருக்கவேண்டும் என்பதனையும் தயவுடன் அறியத்தருகிறேன்.

| |
|---|
| **முதன்மை தொழில்நுட்பம அல்லாத சேவை வகை மற்றும் முதன்மை தொழில்நுட்ப சேவை வகையின் வினைத்திறன் தடைதாண்டல் 2022(1)**<br><br>**சிரேஷ்ட உதவிச் செயலாளர்,**<br>**(கல்விசாரா மற்றும் ஒருங்கிணைந்த சேவை)**<br>**கல்வி அமைச்சு**<br>**இசுருபாய**<br>**பத்தரமுல்ல** |

**06.** அத்துடன் இந்த விண்ணப்பம் உரிய வலய அலுவலகம் அல்லது கல்வியியற் கல்லூரி பரிந்துரைக்காக முன்வைக்கும்போது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை தபாலிடுவதற்கு முன் அதில் **scan/photo image** என பெற்றுக்கொள்ளும் பிரதியொன்றை விண்ணப்பத்தின் கீழ் மூலையில் (க.வே.) என்று குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் **(Google Forms)** ஊடாக அமைச்சிற்கு முன்னிலைப்படுத்துவது உரிய வலயக்கல்வி/ கல்வியியற் கல்லூரி மூலமாக மேற்கொள்வது கட்டாயம் என்பதால் அது குறித்து விசேட கவனம் செலுத்துமாறு விண்ணப்பதாரிகள் அறிவுறுத்தப்பட வேண்டும்.

**07.** இந்த பரீட்சை வின்னப்பத்தின் மென் பிரதியை https://moe.gov.lk/எனும் இணையத்தளம் ஊடாகவும் பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். மேலும், இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை 2022.08.15 ஆம் திகதிக்கு முன் நடைபெறும் என்பதால் இனிமேல் பரீட்சை நேர அட்டவணை, பரீட்சைத் தொடர்பான அனைத்து அறிவுறுத்தல்கள் மற்றும் முடிவுகள் உரிய இணையத்தள மூலமாக காட்சிப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் என்பதுடன் அது குறித்து கவனம் செலுத்துமாறு ஊழியர்களை அறிவுறுத்தும்படி மேலும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

**08.** இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரிசோதனைக்காக தோற்றும்போது அனைத்து பரீட்சாத்திகளும் தமக்கு வழங்கப்பட்டுள்ள,

I. நியமனக்கடிதம்
II. இறுதியாக கிடைக்கப்பெற்ற பதவியுயர்வு தொடர்பான கடிதம்
III. இறுதியாக சித்தியடைந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களின் அசல் பிரதி அல்லது உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை முன்னிலைப்படுத்துவது கட்டாயம் என்பதை கருத்திற்கொள்ளவும்.

**09.** இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரிசோதனை தொடர்பான வினவல்கள் இருப்பின் அலுவலக நேரத்தில் தொலைபேசி எண் 0112785141, நீட்டிப்பு எண் 1235 ஊடாகவும் மேற்கொள்ளலாம்

ஆர். பீ. கங்கேவல

மேலதிக செயலாளர் (கல்விசாரா மற்றும் ஒருங்கிணைந்த சேவை)

பிரதிகள்-

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் - த.செ. இத்துடன் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள எனது சமஇலக்கமுடைய கடிதம் குறித்தும் கவனம் செலுத்தி தே.ந.மே